
# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் – 56

ஐப்பசி – மார்கழி 2014



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை


40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு – 06

அமுதம் 14

துளி 4

## நம்பிக்கையே வாழ்வு

"நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை; நம்பிக்கை, நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை - இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும். எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன். உங்கள் முப்பத்து மூன்று கோடிப்புராண தெய்வங்களிடமும் மேலும் அவ்வப்போது உங்களிடையே அந்நிய நாட்டினர் புகுத்தியிருக்கும் மற்ற தெய்வங்களிடமும் உங்களுக்கு நம்பிக்கை இருந்த போதிலும், உங்களிடமே உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், கதி மோட்சமில்லை.



தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். என்னருமை மாணவர்களே! நான் கூறும் அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள். எழுந்து நில்லுங்கள்! உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள். எதையும் உங்களால் சாதிக்கமுடியும் என்று நம்புங்கள். இறைவன் நமது சார்பில் இருக்கிறான் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.

முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை. அதுதான் வெற்றிக்கு வழி. பிறகு அந்த நம்பிக்கையை நாட்டிற்கு வழங்கு. எதற்கும் கலங்காத நம்பிக்கை, எதற்கும் தளராத தன்னம்பிக்கை உனக்கு இருக்கவேண்டும். எனவே தைரியமுள்ள என் இளைஞர்களே! முன்னேறிச் செல்லுங்கள்! முன்னேறிச் செல்லுங்கள்!

இந்த உலகம் ஒரு மிகப் பெரிய உடற்பயிற்சிக்கூடம். இங்கு நாம் நம்மை வலிமையுடையவர்களாக்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம். நீயே உன் விதியைப் படைப்பவன் என்பதைத் தெரிந்து கொள்.

நமக்கு நம்பிக்கை வேண்டும். நாம் செய்யும் செயல்களில் ஈடுபாடு வேண்டும். நம்மிடமே நமக்கு நம்பிக்கை வேண்டும். நீ நம்பிக்கையுடன் விஷத்தை பொருட்படுத்தாதிருந்தால், பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகிவிடும்.

தொகுப்பு: **சி. அபிராமி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

R.Prahlathan / R.Lambothara

# பிரார்த்தனை



த்வம் வைஷ்ணவீ-சக்தி-ரனந்த-வீர்யா

விச்வஸ்ய பீஜம் பரமாஸி மாயா |

ஸம்மோஹிதம் **தேவி** ஸமஸ்த-மேதத்

த்வம் வை ப்ரஸன்னா **புவி** முக்திஹேது: ||

**பொருள்:** அளவற்ற வீரியம் படைத்த விஷ்ணுவின் சக்தி நீயே. உலகத்திற்கு வித்தாகிய மகாமாயையும் ஆகின்றாய், தேவி! (உன்னால்) இது எல்லாம் மயக்கத்திலாழ்த்தப்பட்டுள்ளது. உலகில் நீ அருள் புரிந்தால் அது முக்திக்குக் காரணம்.

நாயகி, நான்முகி, நாராயணி, கை நளின பஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதி நச்சு
வாய் அகி மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று
ஆய கியாதியுடையாள் சரணம்-அரண் நமக்கே.

**பொருள்:** ஏ அபிராமியே! நீயே உலக நாயகி. பிரம்ம சக்தியும், விஷ்ணு சக்தியும் நீ. நீயே ஒய்யாரமாக ஐவகை மலர் அம்புகளைக் கையிலேந்தியவள். சம்புசக்தி, சங்கரி, எழிலுடையாள், நாகபாணி, மாலினி, உலகளிக்கும் வாராகி, சூலினி, மாதங்க முனிமகள் என்றெல்லாம் பல வடிவானவள்! நீயே ஆதியானவள். ஆகவே, உன்னுடைய திருவடியையே வணங்கினோம். அதுவே எமக்குப் பாதுகாவல்.

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.**

**அமுதம் 14** **துளி 4**



**Compliments**
**With the Blessings of Holy Trio**

## இந்த இதழில்...

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 01 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து | 03 |
| 3. | நவராத்திரி - கவிதை | 06 |
| 4. | பஞ்சதந்திரக் கதை | 07 |
| 5. | நம்பிக்கையின் சக்தி | 09 |
| 6. | யோகம் | 19 |
| 7. | கலியுக கற்பகதரு | 21 |
| 8. | கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள் | 23 |
| 9. | பாப்பா பாப்பா கதை கேளு | 24 |
| 10. | உங்கள் கருத்து | 26 |
| 11. | தைத்திரீய உபநிஷதம் | 27 |
| 12. | உண்மைச் சம்பவம் | 30 |
| 13. | கைம்மாறு கருதாத உதவி - படக்கதை | 32 |
| 14. | சாதனையாளர் | 34 |
| 15. | குறுக்கெழுத்துப் போட்டி | 37 |
| 16. | செய்திகள் | 39 |


**அட்டைப் பக்கங்களில்...**

| | | |
|---|---|---|
| 1. | அட்டைப் படம் | |
| 2. | நம்பிக்கையே வாழ்வு | ii |
| 3. | படம் தரும் பாடம் | iii |
| 4. | உங்கள் சிந்தனைக்கு... | |

## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய நவராத்திரி மற்றும் தீபாவளி வாழ்த்துக்கள்.

நவராத்திரியில் முப்பெரும் தேவியரை வழிபட்டு கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றில் முன்னேற்றம் பெற்றிருப்பீர்கள். இத் தேவியரின் அனுக்கிரகம் கிடைத்தால் எம்முள் ஏற்கனவே பொதிந்துள்ள அளப்பரிய சக்தி, புதுப் பொலிவுபெற்று வெளிப்படும். இதன் மூலம் வாழ்வில் வெற்றிபெற்றவர்களாய் நாம் வாழலாம்.

வாழ்வில் வெற்றி பெறுவதற்கு எமக்கு மூன்று விடயங்கள் அவசியம். முதலாவது, இலக்கு. வாழ்க்கை என்பது ஒரு பயணம் போன்றது. இலக்கு இல்லாவிட்டால் அந்தப் பயணம் எம்மை எங்கு கொண்டு சேர்க்கும் என்பது எமக்குத் தெரியாது. இலக்கு இல்லாமல் வாழ்பவர்கள் பெரும்பாலும் தாம் எதிர்பாராத, விரும்பத்தகாத நிலையையே முடிவில் அடைகிறார்கள். வாழ்வில் திருப்தியற்று வெறுமையில் துவளும் மனிதர்கள்தான் இவ் உலகில் அதிகளவில் இருக்கின்றனர். இதற்குக் காரணம் வாழ்வில் தமக்கென ஓர் இலட்சியத்தினை வகுத்துக் கொள்ளாததுதான். இலட்சியம் உள்ளவன் ஆயிரம் தவறுகள் செய்தால் இலட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என உறுதிபடக் கூறுகிறார் சுவாமி விவேகானந்தர். எனவே வாழ்வில் ஒரு இலட்சியம் மிகவும் அவசியம்.

இரண்டாவதாக எமக்குத் தேவைப்படுவது நம்பிக்கை. இருவிதமான நம்பிக்கைகள் எமக்கு அவசியம். முதலில் தன்னம்பிக்கை. ‘எடுத்துக்கொண்ட இலட்சியத்தை என்னால் அடைய முடியும்’ என்று முதலில் நாம் நம்ப வேண்டும். அப்போதுதான் இலட்சியத்தை நோக்கி எம்மால் பயணிக்க முடியும். இல்லாவிட்டால் இலட்சியம் என்பது எட்டாக் கனியாகவே இருக்கும். தன்னம்பிக்கை இல்லாதவனுக்கு உலகில் உள்ள யாராலும், எந்த சக்தியாலும் உதவி செய்ய முடியாது. இதனால்தான் சுவாமி விவேகானந்தர் “தன்னம்பிக்கை இல்லாதவனையே நாத்திகன் என்று புதிய மதம் கூறுகிறது” என்கிறார். அத்துடன் நமக்குத் தேவையான எல்லா உதவிகளும் எமக்குள்ளிருந்துதான் கிடைக்கின்றன. வெளியிலிருந்து யாராலும் உண்மையில் எமக்கு உதவ முடியாது என்பதையும் நினைவுபடுத்துகிறார்.

அடுத்தது இறைநம்பிக்கை. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பதற்கிணங்க, அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை ஆபத்தை ஏற்படுத்துகிறது. அகம்பாவம் ஏற்பட்டுத் தறிகெட்டுப் போகும் வாய்ப்பும் இருக்கிறது. இவ்வாறு நேர்ந்தால் இலட்சியத்தை அடைவது என்பது கேள்விக்குறி ஆகிவிடும். எனவே எமக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறது என்பதை உணர்ந்து இறைவன்மேல் நம்பிக்கை கொள்ளவேண்டும். "நம்பிக்கை! நம்பிக்கை! நம்மிடத்தில் நம்பிக்கை!! நம்பிக்கை! நம்பிக்கை! இறைவனிடத்தில் நம்பிக்கை!! இதுவே மகிமை பெறுவதன் இரகசியம்" என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்குகள் எமக்குக் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றன. தன்னம்பிக்கையுடன் இறைவனிடம் பிரார்த்திப்பவனது பிரார்த்தனைகள் நிச்சயம் கடவுளைச் சென்றடைகின்றன. அதுமட்டுமல்லாது இலட்சியத்தை நோக்கிய கடுமையான பயணத்தில் சோர்ந்து, தளர்ந்துபோய், தன்னம்பிக்கை இழக்கும் சந்தர்ப்பங்களில் எம்மை மீண்டும் தூக்கி நிறுத்துவது இறைநம்பிக்கைதான். எனவே இறைநம்பிக்கை உள்ளவனுக்குப் பாதை எளிதாகிறது.

வாழ்வில் வெற்றி பெறுவதற்குத் தேவையான மூன்றாவது விடயம் விடாமுயற்சி. இலட்சியத்தை வகுத்துக் கொண்டு தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டு இறைவனையும் துணைக்கு அழைத்துக் கொண்டு எந்த முயற்சியும் இல்லாமல் சும்மா இருப்பவனால் எவ்வாறு முன்னேற முடியும்? வெற்றி பெறுவதற்குத் தேவையான எல்லாத் துணைக் காரணிகளையும் தயார்செய்துகொண்டு பயணத்தைத் தொடங்க வேண்டும். இலட்சியத்தை எப்படியும் அடைந்துவிடவேண்டும் என்ற உறுதியுடன் விடாமுயற்சி செய்ய வேண்டும். தடைகள் வரும்போது தப்பியோட நினைத்தால் அவை எம்மைத் தொடர்ந்து துரத்திக்கொண்டே வரும். விடாமுயற்சி செய்து தடைகளைத் தாண்டினால்தான் இலக்கை அடையலாம். இவ்வாறு இலக்கை வகுத்துத் தன்னம்பிக்யைுடனும் இறைநம்பிக்கையுடனும் விடாமுயற்சி செய்பவனே, தான் எடுத்துக்கொண்ட இலட்சியத்தை அடைந்து வாழ்வில் வெற்றி பெற்றவனாக திருப்தியுடனும் பெருமிதத்துடனும் வாழ்கிறான்.

எப்போதும் வீரராகவும் வெற்றியாளராகவும் வாழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர். அவர் இளைஞர்களுக்கு வகுத்துக் கொடுத்த பாதை எம்மை வாழ்வில் சிறந்த உயரத்திற்கு இட்டுச் செல்லும். அவரது சிந்தனைகளைக் கடைப்பிடித்தால் உலகிலேயே மிக உயர்ந்த எவரெஸ்ட் மலைச் சிகரம் போன்ற அளவுக்கு வாழ்வில் மிகச் சிறந்ன மேன்மை நிலையை அடையலாம். இக்கருத்தையே இம்முறை எமது அறநெறி அமுதத்தின் அட்டைப்படம் கருவாகச் சுமந்து வந்துள்ளது. மேற்கண்ட அனைத்தையும் தன் வாழ்வில் நிரூபித்துக் காட்டியிருக்கிறாள் அருணிமா சின்ஹா என்ற காலிழந்த பெண். “வாழ்ந்ததற்கான நல்ல அடையாளத்தை இந்த உலகில் விட்டுச் செல்லுங்கள்” என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கிணங்க அருணிமா விட்டுச்சென்ற அடையாளத்தையும் அதை அவள் எவ்வாறு சாதித்தாள் என்பதையும் 14ஆம் பக்கத்தில் காண்போம்.

வெற்றிக்கான இந்த வழிமுறைகளையும் முன்னுதாரணங்களையும் வாசகர்களுக்காய் சுமந்துவரும் இவ் அறநெறி அமுதத் துளியை பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

இந்த அமுதத்தை எங்கள் அறநெறிப் பாடசாலையின் மாணவரின் பெற்றோரான திரு.வை.பரமானந்தன் அவர்கள் தமது தாராள மனத்தால் இலவசமாக அச்சிட்டுக் கொடுத்துள்ளார். அவருக்குத் திரிமூர்த்திகளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

உலக வரலாறு என்பது **தன்னம்பிக்கை** உடைய சிலரின் வரலாறே. அத்தகைய **தன்னம்பிக்கை** நம்முள் இருக்கும் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துகிறது. நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். எல்லையற்ற ஆற்றல் வெளிப்படும் அளவுக்கு நீங்கள் முயலாதபோது தான் தோல்வி அடைகிறீர்கள். **தன்னம்பிக்கையை** இழக்கின்ற அந்தக் கணமே ஒருவன் அழிகிறான், ஒரு நாடும் அவ்வாறே..

- **சுவாமி விவேகானந்தர்** -

# நவராத்திரி

அலைகளில் அகப்பட்ட துரும்பாய் -இந்த
அவனியில் அலைந்து சோர்வுறும் மனமே!
அன்பினால் அடைக்கலம் விரும்பியே -இனிய
நவயுக நாயகி நோன்புறுதினமே!

நினைந்திடும் போது நிறைந்திடும் அருளே!
நிலையான நித்திய பேரொளிப் பொருளே!
நிலையற்ற நிலையில் நின் நினைவிங்குவருதே!
நினதருள் வித்தியின் நிறைவெலாம் தருதே!

உள்ளத்தில் உனை ஏற்கும் ஒன்பது இரவே,
உருகியே உனைப்பாடக் கடிதினில் வருவாய்!
உயிர்களின் உள்நிற்கும் கற்பகத் தருவே,
உமையே! உனைநாட விடிவினைத் தருவாய்!

இயங்கிடும் கருவியை இயக்கிடும் தாயே!
இயலிசை நாடகத்தில் இருப்பவள் நீயே!
இணையற்ற அருவி நின் இன்னருள் தானே!
இதையிங்கு நாடாது இருப்பது வீணே!

ஆக்கம்: **ச. துளக்சன்**, பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

**பஞ்சதந்திரக் கதை**

# நீல நரி

அந்தக் காட்டில் சண்டாவரன் என்னும் நரி ஒன்று வசித்து வந்தது. ஒருநாள் இரவு இரை தேடப் புறப்பட்ட நரி, எப்படியோ காட்டை விட்டு நக்ருக்குள் நுழைந்து விட்டது.



உடனே, அவ்வூரிலிருந்த நாய்கள், நரியைக் கடிக்கும் நோக்கத்துடன் துரத்தத் தொடங்கின. நாய்களுக்குப் பயந்து கொண்டு, கண்மண் தெரியாமல் ஓடியதால், நரி ஒரு சாயக்காரன் தோட்டத்தில் இருந்த சாயத் தொட்டியில் விழுந்து விட்டது. அதனால் நரியின் உடல் முழுவதும் நீல நிறமாகிவிட்டது.

துரத்தி வந்த நாய்களுக்கு அடையாளம் தெரியவில்லை. அதனால் நாய்கள் திரும்பி விட்டன. ஆயுள் கெட்டியாய் இருந்ததால் நரி பிழைத்தது. அதன் பிறகு நரி பதுங்கிப் பதுங்கிச் சென்று காட்டினுள் நுழைந்து விட்டது.

அங்கிருந்த சிங்கம், புலி போன்ற மிருகங்கள் இந்த நீல நரியைக் கண்டு திகைத்தன. "என்ன புதுமையான விலங்கு இது! நாம் இதுவரை இதைப் பார்த்ததே இல்லையே! இது அபூர்வ நிறமாக உள்ளதே!" என்று இரகசியம் பேசிக் கொண்டன. பிறகு அச்சம் கொண்டு ஓடத் தொடங்கின.

தன்னைக் கண்டுதான் பயந்து கொண்டு இப்படி ஓடுகின்றன இவ்விலங்குகள் என்று நீல நரி தெரிந்து கொண்டது.



உடனே, "ஓடாதீர்கள், இங்கு சரியான அரசன் இல்லை என்பதையறிந்த தேவர்கள், என்னை இங்கு அரசனாயிருக்கும்படி பணித்து அனுப்பி வைத்துள்ளார்கள். என் புய வலிமையால் உங்களை நான் தவறாமல் காப்பாற்றுவேன். என் பெயர் சண்டாவரன்" என்று கூறிற்று.



அதுகேட்டு, ஓடிப்போன மிருகங்கள் அனைத்தும் திரும்பி வந்தன. நரியின் கால்களில் விழுந்து வணங்கின. "நீங்கள் என்ன கட்டளையிடுகின்றீர்களோ, அப்படியே நடக்கிறோம்" என்றன அம்மிருகங்கள். உடனே அந்நீலநரி அக்காட்டின் அரசனாக உலவத் தொடங்கிற்று. சிங்கம்தான் அமைச்சன். புலி காவலாள். மற்ற மிருகங்கள் எல்லாம் ஏவலாட்கள்.

ஆனால் தன் இனத்தைச் சேர்ந்த நரிகளை மாத்திரம் அது அலட்சியப்படுத்தியது; கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியது. அவை விலங்குகளை வேட்டையாடி வந்து நீலநரியின் முன் வைக்கும். தகுதிக்கேற்ப அந்த இறைச்சியை மற்ற விலங்குகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும். இதனால் மற்ற விலங்குகளும் மிகுந்த திருப்தியடைந்தன. இவ்வண்ணம் அந்நீலநரியின் ஆட்சி வெகு சுகமாகச் சென்றது.



ஒரு நாள் அரசவையில் அந்நீலநரி வீற்றிருந்த சமயம், பக்கத்திலிருந்த மற்ற நரிகள் ஒன்றுகூடி ஊளையிட்டன. அதுகேட்ட அந்நீலநரிக்குத் தன் பூர்வாசிரம் நினைவு வந்துவிட்டது. அவ்வளவுதான், அந்நீலநரியும் மிகவும் உற்சாகத்துடன் ஊளையிடத் தொடங்கியது. இதனால் அங்கிருந்த மற்ற விலங்குகள், அது நரி என்பதை எளிதில் தெரிந்து கொண்டன. சாதாரண நரி நம்மை ஆளுவதாவது! என்று கத்திக் கொண்டே அதனைக் கொல்வதற்கு ஓடின.

ஒருவன் எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாலும் சிலரைப் பல நாளைக்கும், பலரைச் சிலநாளைக்கும் தான் ஏமாற்ற முடியும். எப்பொழுதுமே எல்லோரையும் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்பதை இக்கதை எமக்கு விளக்குகிறது.

தொகுப்பு: **இ. ரிசிகா**, தொண்டராசிரியை
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# நம்பிக்கையின் சக்தி

எவரெஸ்ட் மலையில் ஏறிய உலகிலேயே முதலாவது ஊனமுற்ற பெண் இந்தியாவைச் சேர்ந்த அருணிமா சின்ஹா. அவள் 17 மணித்தியாலக் கடும் முயற்சியால் 21-05-2014 அன்று எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தாள். அவள், ஸ்ரீ இராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பக்தை. சுவாமி நிகிலேஸ்வரானந்தஜி அவளது கதையைச் சொல்கிறார்.

"நம்பிக்கை! நம்பிக்கை! நம்மிடத்தில் நம்பிக்கை!! நம்பிக்கை! நம்பிக்கை! இறைவனிடத்தில் நம்பிக்கை!! இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும்" என்றார் சுவாமி விவேகானந்தர்.



இந்த வாக்கியங்களுக்கான உதாரணத்தை நாம் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய, உலகிலேயே முதலாவது ஊனமுற்ற பெண்ணான அருணிமா சின்ஹாவின் வாழ்வில் காண்கிறோம். அவளது வாழ்க்கை சிலிர்ப்பை ஏற்படுத்தும், எழுச்சியூட்டும் வாழ்க்கை.

2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி, அருணிமா லக்னௌவிலிருந்து டெல்லியில் நடைபெறும் மத்திய தொழில்சார் பாதுகாப்புப் படையில் சேர்வதற்கான தேர்வொன்றுக்குச் செல்வதற்காகப் புகையிரதத்தில் பயணித்தாள். நடு இரவில் துரதிஷ்டவசமாக, நான்கு ஆயுதமேந்திய கொள்ளைக்காரர் அப் புகையிரதத்துள் நுழைந்தனர். அங்கிருந்த பயணிகளிடம், பெறுமதியான பொருட்களையெல்லாம் தருமாறு துப்பாக்கி முனையில் மிரட்டினர். ஆனால் இயல்பாகவே தைரியமான அருணிமா, தன் தங்கச் சங்கிலியையும் பணப்பையையும் கொடுக்க மறுத்தாள். இதனால் அத் திருடர்கள் அவளை ஓடும் இரயிலிலிருந்து வெளியே தள்ளினர். அவள் கீழே விழுந்ததும் அடுத்த தண்டவாளத்தில் எதிரே வந்த இரயில் அவளது காலை முழங்காலுக்குக் கீழ் நொறுக்கிச் சென்றது. பலத்த காயம் மற்றும் தொடர்ந்து இரத்தம் வழிந்ததால் அவளால் எவ்வளவு முயன்றும் அங்கிருந்து நகர முடியவில்லை. அவள் கடுமையாக அழுதும், அவளைக் காப்பாற்ற யாரும் வரவில்லை.

அந்த இரவு முழுவதும் அவள் இரண்டு தண்டவாளப் பாதைகளுக்கு மத்தியில் உதவியின்றிக் கிடந்தாள். விடிந்தபின் அவளை அங்கு கண்ட கிராமத்தவர்கள் 3 கி.மீ தொலைவிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர். அவளது காலில் பல்வேறு காயங்கள் இருப்பதை . வைத்தியர்கள் அவதானித்தனர். முழங்காலுக்குக் கீழே கால் தொங்கிக் கொண்டிருந்ததுடன் கிருமித் தொற்றுக்கும் ஆளாகியிருந்தது. "மயக்கமருந்து கொடுத்து இவளது கிருமி தொற்றிய காலைத் துண்டிக்கலாமென்றால் மயக்க மருந்தோ முடிந்துவிட்டது. எனவே இவளைக் காப்பாற்ற முடியாது" என்று வைத்தியர்கள் தமக்குள் பேசிக்கொண்டனர். இவர்களின் உரையாடலை நரகவேதனையுடன் கேட்டுக்கொண்டிருந்த அருணிமா, "நான் வாழவேண்டும்! மயக்கமருந்து இல்லாமலே காலைத் துண்டியுங்கள்" என்றாள். அவளது ஊக்கத்தையும் உறுதியையும் கண்டு வியந்த வைத்தியர்கள் இரண்டரை மணிநேர சத்திரசிகிச்சை மூலம் இவளது கிருமி தொற்றிய காலை வெட்டியகற்றினர். அவ்வளவு நேரமும், ஊக்கத்துடன் அந்தக் கொடிய வலியைப் பொறுத்துக்கொண்டாள் அருணிமா.



பின்னர் பெரிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு 4 மாத சிகிச்சையின் பின் செயற்கைக்கால் ஒன்றைப் பொருத்திக்கொண்டாள் அருணிமா. தேசிய மட்டத்தில் விளையாட்டு வீராங்கனை ஆகவேண்டும் என்பதே விபத்துக்கு முன் அவளது ஆசையாக இருந்தது.

அவளை வைத்தியசாலையில் காண வந்த நண்பர்கள், அவளது ஆசை நிராசையாகிவிட்டதே என்று அனுதாபம் தெரிவித்தனர். உடல் ஊனமுற்றதால் வந்த வலியைவிட தன் இலக்கை அடைய முடியாதே என்ற கவலையால் மனமுடைந்து போனாள் அருணிமா.

அவளது வாழ்வின் இந்த இருண்ட பகுதியில் ஒருநாள் திடீரெனப் புத்துணர்ச்சி வந்தது. "நான் தோற்றுப்போக மாட்டேன்.

எனது 'நலன்விரும்பி'களின் பரிதாபம் தவறானது என்பதை நிரூபிப்பேன்" என உறுதி பூண்டாள். அப்போது எவரெஸ்ட் மலையில் சிலர் ஏறப்போவதைப் பற்றிக் கேள்விப்பட்ட அருணிமா, முடியாததை முடித்துக்காட்டுவது என்று அதையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டாள். ஊனமுற்றிருந்தாலும் எவரெஸ்ட் மலையில் ஏறி, தான் தோற்றுப்போனவள் அல்ல என்பதை உலகுக்கு நிரூபிக்கத் திடங்கொண்டாள். தன் தாயிடம் இந்த முடிவைக் கூறியபோது அவர் அதிர்ந்துபோய், "உனக்கு யார் பயிற்சி தருவார்?" என்று கேட்டார். அதற்கு அருணிமா, "அம்மா, என் வாழ்வே இனிமேல்தான் தொடங்கப் போகிறது. நீ எனக்கு உதவு. நான் வெற்றியடைவேன்" என்றாள்.

எவரெஸ்ட் மலையில் ஏறிய முதலாவது இந்தியப் பெண்ணாகிய 'பசேந்திரிபால்'ஐச் சந்தித்தாள் அருணிமா. "உன்னால் எப்படி இவ்வாறு சிந்திக்க முடிகிறது?" என ஆச்சரியப்பட்ட பசேந்திரிபால் அவளுக்குப் பயிற்சி வழங்கத் தொடங்கினார்.




அவளுடன் பயிற்சி பெற்ற அனைவரும் இரண்டு காலும் உள்ளவர்கள். சில சமயங்களில் அருணிமாவால் அவர்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் போகும். அப்போது அவள் தன் மனதில், "ஒருநாள் நான் இவர்களுக்கு முன் செல்வேன்" எனக் கூறிக்கொள்வாள்.

23.01.2013 அன்று பயிற்சி தொடர்பாக அவள் வட இந்தியாவிலுள்ள வதோதரா என்ற இடத்துக்குச் சென்றபோது சிலர் அவளை விவேகானந்த ஆச்சிரமத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சுவாமி விவேகானந்தர் தங்கிய அறை தற்போது தியான அறையாக இருக்கிறது. அங்கு அவள் தியானம் செய்தாள். அவளது மனம் ஆனந்த அனுபவத்தில் திளைத்தது. தியானத்தின்போது தான் புதுச் சக்தி பெற்றதாக அவள் அந்த ஆச்சிரமத் தலைமைச் சுவாமியாகிய சுவாமி நிகிலேசானந்தஜியிடம் கூறினாள். சுவாமிகள் அவளை மறுநாளும் வருமாறு கூறினார்.

மறுநாள்தான் அவள் தன் இலட்சியத்தை சுவாமிகளிடம் கூறினாள். அவர் சுவாமி விவேகானந்தரின் புத்தகங்கள் சிலவற்றையும் தெய்வத் திருமூவராகிய ஸ்ரீ இராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படத்தையும் அருணிமாவுக்கு அன்பளிப்பாக வழங்கினார். "சோர்வோ பலவீனமோ ஏற்படும்போது இந்தப் படங்களைப் பார். புது சக்தியும் உற்சாகமும் உனக்கு ஏற்படும்" என்று சுவாமிகள் ஆசீர்வதித்தார். "இந்த ஆசி எனது கடினமான மலையேற்றத்தில்



பலமுறை எனக்கு ஊக்கத்தைத் தந்தது" என்று பின்நாளில் அருணிமா கூறினாள்.

ஒரு வருடக் கடும் பயிற்சியின் போது சில சமயங்களில் அவளது செயற்கைக் கால் நழுவி உராய்வதால் இரத்தம் கசியும். அதனால் வேகம் குறைந்துவிடும் என்பதால் அதை சுத்தம் செய்யாமலே தொடர்ந்து நடப்பாள் அருணிமா. பின்னர் அச் செயற்கைக் கால் உடைந்து விட்டது. புதிய செயற்கைக் காலுக்கு யார் பணம் தருவார்? அவள் விவேகானந்த ஆச்சிரமத்திடமே சரணடைந்தாள். சுவாமிகள், பக்தர்களிடம் நன்கொடை பெற்று புதிய கால் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

பின் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்கான பயிற்சியாக, ஐலண்ட் பீக் (Island Peak) என்ற 20,305 அடி உயரமுள்ள மலையில் ஏறினாள். அதன் பின் ஏப்ரல் மாதம் ஆதார முகாமைச் சென்றடைந்த அருணிமா, அச் சூழலுக்குப் பழக்கப்படுவதற்காக ஒரு மாதம் அங்கு தங்கினாள். அவள் தன் கூடாரத்தில் சிறிய கருவறை அமைத்து தெய்வத் திருமூவரை வழிபட்டுவந்தாள். மே 16ஆம் திகதி சிகரத்தில் ஏறுவதற்கான பயணத்தை ஆரம்பித்தாள். மலையேறுவதற்கு வேண்டிய முக்கிய அங்கம் (கால்) இல்லாமல் நீ எப்படி ஏறுவாய்? என்ற பலரின் கேள்விக்கு அவள் பதில் கூறவில்லை. "என் மனதில் உள்ள ஒன்று - இலட்சிய தாகம், உங்களிடம் இல்லையே" என்று தனக்குள் கூறிக்கொள்வாள்.

அந்த நெடிய பயணத்தில் அவள் பல இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தது. ஒருமுறை அவளது செயற்கைக் கால் கழன்று விழுந்துவிட்டது. பின்னால் வந்தவர்களோ "தொடர்ந்து செல்" என்று



கூக்குரலிட்டனர். அவளால் எப்படித் தொடர்ந்து செல்ல முடியும்? ஒற்றைக் கையில் தன் போலிக் காலை வைத்துக்கொண்டு பாதுகாப்பான இடமாக ஒதுங்கிய அருணிமா தன் காலைப் பொருத்திக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தாள். போகும் வழியில் தனக்கு மேலும் உத்வேகம் கிடைப்பதற்காக 'ஜய் சுவாமிஜி' (சுவாமி விவேகானந்தருக்கு ஜெயம்) என்று கோசமிட்டுக்கொண்டே சென்றாள். இடையிடையே தன் பையிலிருந்த தெய்வத் திருமூவரின் படத்தை எடுத்துப் பார்த்துவிட்டு மீண்டும் பையில் வைத்துக்கொண்டாள். இதைக் கண்ட அவளுடன் வந்த வழிகாட்டி, ஏன் தேவையில்லாமல் இப்படிச் செய்கிறாள் என்று கேட்டார். அதற்கு அவள், "உங்களுக்குப் புரியாது. இதுதான் எனக்கு **சக்திக் குழுசை**" என்று கூறினாள்.

போகும் வழியில் அவள் பல பிணங்களைக் கண்டாள். அருணிமா அந்தப் பிணங்களுக்குரிய உயிர்களை நினைத்துக்கொண்டு "உங்களில் எத்தனைபேர் எவரெஸ்ட் சிகரத்தை அடையும் ஆசையைப் பூர்த்தி செய்தீர்கள் என்று எனக்குத் தெரியாது. அவ் ஆசை நிறைவேறியிராவிட்டால் உங்களுக்காக நான் அதைப் பூர்த்தி செய்து திரும்புவேன். என்னை ஆசீர்வதியுங்கள்" என்று மனதார வேண்டினாள்.

சிகரத்தைத் தொடுவதற்கு மேலும் 700 அடிகள் இருந்த நிலையில் அவளது பிராணவாயுக் கலன் சிவப்பு ஒளியுடன் கீச்சிட்டது. பிராணவாயு சிறிதளவே இருக்கிறது! இதை அவதானித்த வழிகாட்டி, பதற்றத்துடன் "முயற்சியைக் கைவிட்டு உடனே திரும்புவோம். சிகரத்தை அடையும்போது பிராணவாயு இல்லாவிட்டால் மரணம் நிச்சயம்" என்றார்.

அருணிமாவால் அவ் இடத்தில் இருந்தபடி எவரெஸ்ட் சிகரத்தைப் பார்க்க முடிந்தது. "சிகரத்தை அடைந்து அங்கு தேசியக் கொடியையும் தெய்வத் திருமூவரின் படத்தையும் வைப்பதற்குப் போதுமான அளவாவது பிராணவாயு மீதம் இருக்கும்" என எண்ணிய அருணிமா, வழிகாட்டியின் எச்சரிக்கையைப் புறக்கணித்துவிட்டு வாழ்வில் மிகப் பெரிய ஆபத்தைக் கையில் எடுத்துக்கொண்டாள். "உன் மரணத்தைக் காண்பதற்காக உன்னோடு வரமாட்டேன்" என்று பயமுறுத்திய வழிகாட்டி, அருணிமாவின் உறுதியைக் கண்டுவிட்டு அவளுடனேயே சென்றார்.

மே 21ஆம் திகதி 29,029அடி உயரமான சிகரத்தை அடைந்து 'எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதலாவது ஊனமுற்ற பெண்' என்று சாதனை படைத்தாள். அங்கு இந்தியக் கொடியை நாட்டிவிட்டு இரு நிமிடக் காணொளியைப் பதிவு செய்தாள். அதை இளைஞர்களுக்கு அனுப்பி அவர்களுக்கு எழுச்சியூட்டுமாறு வழிகாட்டியிடம் கூறினாள். அந்தக் காணொளியில் **"மரணமே நேருமென்றாலும் இலக்கை நோக்கி முன்னேறுங்கள். மரணத்தை எதிர்கொண்டுதான் நான் உலகிலேயே உயரமான இந்த இடத்தில் நிற்கிறேன்"** என்று இளைஞர்களை விழித்துக் கூறினாள்.





சிகரத்திலிருந்த பனியால் பீடம் செய்து, தான் கொண்டு சென்ற தெய்வத் திருமூவரின் திருவுருவத்தையும் திரிசூலத்தையும் வைத்துப் பூஜை செய்தாள். வழிபட்டபின் "இராமகிருஷ்ண மடத்துத் துறவியரைப்போல் மந்திரம் சொல்லி வழிபட எனக்குத் தெரியாது. ஆனால் என் இதயத்திலிருந்து பக்தியுடன் வரும் இந்தப் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளுங்கள். அனைத்து மக்களின் துன்பங்களையும் துடையுங்கள்.



குறிப்பாக என்னைவிடத் துரதிஷ்டம் கொண்டவர்கள் மீது கருணை கொள்ளுங்கள்" என்று கூறினாள். வழிகாட்டியோ பிராணவாயு முடிந்து இவள் இறந்துவிடப் போகிறாள் என்று பதறினார். காலை 11 மணிக்குமேல் அந்தச் சிகரத்தில் நிற்பது தற்கொலை செய்வதற்குச் சமமானது. ஆனால் மணி 11ஐத் தாண்டிவிட்டது. வெப்பநிலை மறை 40 பாகை செல்சியஸிற்குக் குறைந்து காற்று அதிபயங்கர வேகத்தில் வீசியது. பிராணவாயுக் கலனில் மிகச் சிறிதளவு வாயுவே இருந்தது. இப்படிப்பட்ட பயங்கரப் பாதகமான சூழலிலும் மனஅமைதியுடன் ஒருமுகப்பட்டுப் பிரார்த்தனை செய்து முடித்தாள் அருணிமா. மலையிறங்கும் பயணம் தொடங்கியது.



சில நிமிடங்களில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. வெள்ளைக்காரர் ஒருவர் இரண்டு கலன்களுடன் மலையேறியிருந்தார். பாதகமான காலநிலையைக் கண்டு முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினார். பாரத்தைக் குறைப்பதற்காகத் தான் பயன்படுத்திக்கொண்டிருந்த கலனை எறிந்துவிட்டு புதிய கலனைப் பொருத்திக்கொண்டு சென்றிருந்தார். இதைக்கண்ட வழிகாட்டி அதை எடுத்து அருணிமாவுக்குப் பொருத்தி அவளது உயிரைக் காத்தார்.

மலையிறங்கும்போதும் அருணிமா பல இன்னல்களைச் சந்தித்தாள். ஓர் இடத்தில் அருணிமாவின் கை பனியில் உறைந்து விட்டது. இறங்குவதற்காக கயிற்றைப் பிடிப்பதே கடினமாக இருந்தது. அப்போது அவள் வேதனை தாங்காமல் அழுதுவிட்டாள். சிறிது நேரத்தில் இழந்த உறுதியைப் பெற்றுக் கொண்டு கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். தனக்குத்தானே ஊக்கம் சொன்னாள். **"அருணிமா! அழுவதால் பயனில்லை. வாழவேண்டுமானால் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு முன்னேறத்தான் வேண்டும். துன்பமின்றி வெற்றியில்லை"** என்று சுய ஊக்கம் பெற்றவள், இறைவனைப் பிரார்த்தித்தாள். "எல்லாம் வல்ல இறைவா, நான் இப்போது இறக்கவேண்டுமென்றா விரும்புகிறீர்கள்? ஆனால் நான் உங்கள் மகள்.

எனவே நான் என்னால் முடிந்தவரை மரணத்துடன் போராடுவேன். யாருக்கு வெற்றி என்று பார்ப்போம்'' என்று கூறியபடி முன்னேறினாள்.



ஒருவாறு அருணிமா உயிர் பிழைத்து மீண்டாள். **'முடவனை மலைதாண்டவும் ஊமையைப் பேச்சாளனாகவும் வைப்பார் இறைவன்'** என்ற வேத வாக்கை நிரூபித்துவிட்டாள். உலகில் அதியுயர்ந்த மலையில் ஏறியது மட்டுமல்லாமல் அவள் பல இடங்களிலிருந்து வரும் அழைப்பையேற்று ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தன் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு ஊக்கமும் எழுச்சியும் ஊட்டும் வகையில் உரையாற்றி வருகிறாள்.

**"தொடர்ந்து செல்"** என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளால் உந்தப்பட்டு அருணிமாவும் முன்னேறுகிறாள். அங்கவீனமுற்றோருக்காக விளையாட்டுக் கல்வி நிலையம் ஒன்றை உருவாக்க விரும்புகிறாள். அத்துடன் உலகில் உயரமான அடுத்த 6 மலைகளில் அவள் ஏறப் போகிறாள். அதற்கு முன் 2016 ஆம் ஆண்டு ஊனமுற்றவர்களுக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெறுவதற்காக இராமகிருஷ்ண மிஷனில் பயிற்சி எடுத்து வருகிறாள். அவளுக்கு 26 வயதுதான் ஆகிறது. அவள் பயணிக்க இன்னும் நெடுந்தூரம் இருக்கிறது.



"தன்னம்பிக்கையுள்ள சிலரின் வரலாறு தான் இந்த உலகித்தின் வரலாறு. நம்பிக்கையே உள்ளிருக்கும் தெய்வீகத்துக்கான அழைப்பு. உங்களால் எதையும் சாதிக்க முடியும்'' என்று கூறுகிறார் சுவாமி விவேகானந்தர். அருணிமா சின்ஹாவின் வாழ்க்கை நம்பிக்கையின் சக்தியை நம்பச் செய்கிறது.

நன்றி: "Power of Faith" - சுவாமி நிகிலேஸ்வரானந்த, Global Vedanta
தமிழாக்கம்: **க. சொரூபன்**, பழைய மாணவன் (தொண்டராசிரியர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

## சஞ்சிகை ஒன்றுக்கு அருணிமா அளித்த பேட்டி:

தாக்குப்பிடிப்பதன் அடையாளம் நீங்கள். கொடூரமான சம்பவத்தில் உங்கள் காலை இழந்த அந்த அபாயகரமான இரவில் இரண்டுக்கு மேற்பட்ட புகையிரதங்கள் உங்கள் காலைத் துண்டாக்கின. ஆனால் நீங்கள் சுயநினைவை இழக்கவில்லை. வலியைத் தாங்கும் தகைமை வெற்றிக்கான போராட்டத்தில் தவிர்க்க முடியாத ஒன்றா?

வெற்றிக்கான போராட்டம் என்ன? ஒருவர் இடையூறுகளைச் சமாளிக்க எவ்வளவு துணிச்சலையும் வீரத்தையும் வெளிப்படுத்த வேண்டும். துன்பங்களைத் தாங்குவதும் கஷ்டப்படுவதும் வெற்றியுடன் ஒருங்கிணைந்தவை என்று நான் உணர்கிறேன். அது எனது சொந்த அனுபவம். துன்பத்தைச் சகித்துக்கொள்ளும் தகைமை இல்லாமல் உங்களால் வெற்றியாளராக வெளிப்பட முடியாது. ஏராளமான துன்பத்தைத் தாங்கியே ஒருவர் வெற்றியாளராகிறார்.

உங்கள் வாழ்க்கைக்கு எழுச்சியூட்டியவர்கள் கிரிக்கெட் வீரர் யுவராஜ்சிங் மற்றும் சுவாமி விவேகானந்தர் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். இந்தியக் கொடியோடு சுவாமி விவேகானந்தரின் படத்தையும் எவரெஸ்ட் மலையில் ஏறும்போது எடுத்துச் சென்று உச்சியில் வைத்தீர்கள். சுவாமி விவேகானந்தரில் அப்படி என்ன சிறப்பு இருக்கிறது?

சுவாமி விவேகானந்தர் தனிச்சிறப்புடைய மனிதர். அவரைப்பற்றிய அனைத்து விடயங்களும் சாதாரணத்திலிருந்து மிகவும் வேறுபட்டவை. எச்சந்தர்ப்பத்திலும் வீரனாகவும் வெற்றியாளனாகவும் இருப்பவர்கள் மிகவும் அரிது. எனக்கு அத்தகைய மனநிலை தேவைப்பட்டது. வெற்றிக்கும் விடாமுயற்சிக்குமான சக்தியை விவேகானந்தர் உங்களுக்குத் தருவார். அதேவேளை அவர் அரும்பிய மலர்போல் மென்மையும் அன்பும் உடையவர். இத்தகைய அரிய சேர்மானத்தை வேறு எங்கு காணமுடியும்? விவேகானந்தர் இளைஞர்களுக்கு ஒரு பாதையை உருவாக்கியுள்ளார். புராதனமான இந் நாட்டிற்கு அவரே வழிகாட்டி. அவர் வலியுறுத்திய இலக்குகளை இளைஞர்கள் எடுத்துக்கொண்டால் எமது நாடு விரைவிலேயே உலகில் முதன்மையான நாடாக மாறும்.

**உச்சியிலிருந்து 800 மீற்றர் தூரத்தில் இருக்கும்போது உங்கள் பிராணவாயுக்கலன் முடியும்தறுவாயிலிருந்தது. முன்னர் சிகரத்தில் ஏற முயற்சித்த பலரின் பிணங்கள் உங்களைச் சூழ இருந்தது. மரணம் நிச்சயமாகி விட உங்கள் வழிகாட்டியும் திரும்பிச் செல்லுமாறு கேட்டார். ஆனால் நீங்கள் திரும்ப மறுத்து அவரது உத்தரவை மீறினீர்கள். இத்தகைய பயமின்மை நீங்களாகவே வளர்த்துக்கொண்டதா?**

அந்தக் கணத்தில், வெற்றிக்காக அழைக்கப்பட்டவள் நான் என உணர்ந்தேன். **நான் அடையவிருந்த மேன்மையை இந்த உலகில் உள்ள எந்தச் சக்தியாலும் தட்டிச்செல்ல முடியாது.** பயம் விலகிவிட்டது. எனது இலக்கிலேயே என் கவனம் இருந்தது. உங்களுக்குப் 'பயம்' என்பது இல்லாவிட்டால் வெற்றிக்கும் உங்களுக்கும் நடுவில் எந்த சக்தியும் நிற்க முடியாது என்பதை இன்று என்னால் உங்களுச் சொல்ல முடியும். 'பயமே பாவம்' என்கிறார் சுவாமி விவேகானந்தர். மரணபயத்தை வெற்றிகொள்வது எப்படி என்பதை நான் விளங்கிக் கொண்டேன்.

**உங்களைப்போல் வெற்றியடைய விரும்பும் இளைஞருக்கு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

மனதில் நம்பிக்கையை விதைத்துக் கொள்ளுமாறு இளைஞர்களை நான் எனது உரைகளில் வற்புறுத்தியிருக்கிறேன். ஆனால் அது மட்டும் போதாது. நீங்கள் கட்டாயம் வாழ்வில் ஓர் இலக்கை வைத்திருப்பதோடு உங்கள் வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும். அந்த இலக்கிற்கு உங்களை அர்ப்பணித்துக்கொள்ளுங்கள். அதிலிருந்து உங்கள் கவனத்தைச் சிதற விடாதீர்கள். உங்கள் இலக்கு நோக்கிய முயற்சியில் ஏராளமான முயற்சியையும் சக்தியையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் இந்தப் பிரபஞ்சத்தின் பிரபுவை உங்களுக்கு வெற்றிவாகை சூட வையுங்கள்.

தொகுப்பு: **க. சொரூபன்**, பழைய மாணவன் (தொண்டராசிரியர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

# யோகம்

கடந்த இதழ் வரை சூரியநமஸ்காரத்தின் முதல் எட்டு நிலைகளையும் பார்த்துவிட்டோம். இந்த இதழில் 9, 10ஆம் நிலைகளைப் பார்ப்போம்.

**ஒன்பதாம் நிலை:**



1. செய்முறை:

- தலை, கழுத்து மற்றும் தோள்களைத் தளர்த்தி நெற்றி மற்றும் உள்ளங்கைகள் தரையைத் தொட்டவாறு இருக்கவும்.
- முழங்கால்களை முன்னோக்கி மடக்கித் தலையைத் தொடவும்.
- மூச்சு வெளிவிட்டபடி உடலை முன்னோக்கி வளைத்து குதிக்கால்களின் மேல் பிருஷ்ட பாகத்தினை அமர்த்தவும்.

2. சுவாச நடை:

- முன்புறம் வளையும்போது வயிறு சுருங்கி வெளிமூச்சில் தொடங்கி இறுதி நிலையில் உள்மூச்சு எடுத்து உடலைத் தளர்த்தவும்.

3. நுண்ணிய விடயங்கள்:

- நெற்றி தரையைத் தொடவேண்டும் என்பதற்காக பிருஷ்ட பாகத்தை மேல் நோக்கி தூக்கக்கூடாது.
- குதிக்கால்களின் மேல் அமர்ந்த வண்ணம் உடலை முடிந்தவரை முன்புறம் மெதுவாக வளைக்கவும்.

4. பலன்கள்:

- நுரையீரல்கள் உறுதிபெறும்.
- வயிறு மற்றும் ஜீரணமண்டலம் சீராகும்
- தலைக்கு இரத்த ஓட்டம் அதிகமாகும்.
- மலட்டுத்தன்மை நீங்குதல் போன்ற சசாங்காசனத்தின் அற்புதமான பலன்களைப் பெறமுடியும்.

**பத்தாம் நிலை:**

1. செய்முறை:

- ஒன்பதாம் நிலையிலிருந்து இடது காலை முன்புறம் கொண்டு வந்து இரண்டு கைகளுக்கும் நடுவே வைக்கவும். இடது தோளினை இடது முழங்காலுக்கு வெளியே நேராக வைக்க வேண்டும்.
- வலது காலை பின்புறம் நேராக நீட்டி முழங்கால் தரையில் படுமாறு வைக்க வேண்டும்.
- தண்டு வடத்தை வளைத்து உள்மூச்சு எடுத்தபடி நெஞ்சை முன்னோக்கி நீட்டிக்கொண்டு கழுத்தை $45^0$ கோணத்தில் வளைத்து பார்வை மேல்நோக்கியவாறு இருக்க வேண்டும்.
- முன்பு பார்த்த மூன்றாம் நிலை போன்று கால்கள் மட்டும் மாற்றமடையும்.

2. சுவாச நடை: உள் மூச்சு

3. நுண்ணிய விடயங்கள்:


- இடது பாதமும் உள்ளங்கைகளும் ஒரே வரிசையில் இருக்க வேண்டும்.
- கழுத்தை கீழ்நோக்கி வ்ளைப்பதும் பார்வை கீழே இருப்பதும் தவறு.

4. பலன்கள்:

- நுரையீரல்களும் வயிற்றுச் சுரப்பிகளும் வலிமை பெறும்.
- பார்வை கூர்மையடையும்.
- நரம்பு மண்டலம் வலிமை பெறும்.
- தைரொய்டு சுரப்பிகள் சிறப்பாக செயற்படும்.




ஆக்கம்: **இ. பிரகலாதன்,** பழைய மாணவன் (தொண்டராசிரியர்)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை




ஊக்கமும் அர்ப்பணிப்பும் என்கின்ற இரு குணநலன்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபடுகின்றது. அவ்வேறுபாட்டிற்கமைய அவர்களின் உயர்வும் வேறுபடுகிறது. திருவள்ளுவர் அழகாக "வெள்ளத்து அனைய மலர் நீட்டம்; மாந்தர் தம் உள்ளத்து அனையது உயர்வு" என்கிறார். கதாதரர் தனது ஆன்மீக சாதனைகளில் காட்டிய ஊக்கமும் அர்ப்பணிப்பும் ஆன்மீக சாதகர்களுக்கு என்றும் வழிகாட்டியாகத் திகழ்கிறது.

கதாதரர் பூஜைவேளைகளிலும், இராம்குமாருக்கு உணவு பரிமாறும் வேளைகளிலும் காணாமல் போவது ஹிருதயருக்கு மர்மமாகவே இருந்தது. இவர் எங்கு செல்கிறார் என அறிய, ஒருநாள் கதாதரரை பின்தொடர்ந்து பஞ்சவடிக்கு சென்றார் ஹிருதயர். அங்கு அவர் கண்டவை அவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

கதாதரரின் உடலில் உடைகள் எதுவும் இல்லை, பூணூல் கூட இல்லை. "இது என்ன கோலம்! இவருக்கு சித்தசுவாதீனமா?" என திகைத்தார் ஹிருதயர். கதாதரரின் இச்செயலுக்கான விளக்கத்தை உடனேயே அறிய விரும்பி "தியானம் செய்வதானால் செய்யுங்கள். அதற்காக உடைகளையும் பூணூலையும் களைய வேண்டுமா?" என உரத்த குரலில் கத்த ஆரம்பிக்கலானார். ஓரிருமுறை ஹிருதயர் இவ்வாறு உரக்கக் கத்திய பின்னரே கதாதரருக்கு புற உணர்வு




வந்தது. பின்பு கதாதரர் ஹிருதயரிடம் "உனக்கு என்ன தெரியும்? உலகத்தளைகளிலிருந்து விடுபடத்தான் தியானம் செய்ய வேண்டும். பிறப்பிலிருந்தே மனிதன் வெறுப்பு, வெட்கம், குலப்பெருமை, நன்னடத்தையால் வரும் கர்வம், அச்சம், மானம், உயர்குடிப்பிறப்பு, அகந்தை, ஆகிய எட்டுத் தளைகளில் சிக்கி உழல்கிறான்.

பூணூல் கூட இவ்வகையான தளைகளில் ஒன்று தான். ஏனெனில் அது, "நான் பிராமணன். அனைவரிலும் உயர்ந்தவன் என்ற தற்பெருமையின் சின்னம். அன்னையின் அருளை நாடும் ஒருவன் இத்தகைய தளைகளிலிருந்து விடுபட்டு ஒருமித்த மனதுடன் அவளை அழைக்க வேண்டும். அதனால் நான் இவற்றைக் களைந்து விட்டேன். தியானம் முடிந்து திரும்பும் பொழுது மறுபடியும் அணிந்து கொள்வேன்" என்று அமைதியாகக் கூறினார் கதாதரர். கதாதரரின் இவ் விளக்கத்தால் மறுமொழி ஒன்றும் கூறாமல் ஹிருதயர் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

நல் இயல்பும், உள்ளமும் கொண்டவர்கள் மற்றவர்களுடைய மதிப்பைப் பெறுவதோடு மட்டுமன்றி நம்பிக்கைக்கும் பாத்திரமாவார்கள். கதாதரருடைய நல் இயல்புகளும், அவரின் செயல்களிலிருந்த நேர்த்தியும் ஆலய தர்மகர்த்தாவான மதுர்பாபுவிற்கு, கதாதரரை எப்படியாவது காளி கோவிலில் பணியில் அமர்த்த வேண்டும் என்ற எண்ணம் ஆழமாய் வேர்விட்டு இருந்தது. அதற்கான தருணத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஆனால் சாதகர் கதாதரரோ வேலையை ஒரு பந்தமாகவும் அதுவும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகவும் எண்ணியிருந்தார்.

ஒருநாள் மதுர்பாபு ஆலயத்திற்கு வந்தபோது, சற்றுத் தொலைவில் கதாதரரும் ஹிருதயரும் சென்று கொண்டிருப்பதைக் கண்டார். உடனே கதாதரரை அழைத்து வரும்படி வேலையாளை அனுப்பினார். கதாதரர் அங்கிருந்து மெல்ல நழுவ எத்தனித்தார். ஹிருதயருக்கு அது பெரிய விஷயமாகப்படவில்லை. அவர் கதாதரரிடம் "அதில் என்ன கஷ்டம் இருக்கிறது? இத்தகைய ஒரு



நல்ல இடத்தில் ஒரு பெரிய மனிதரின் கீழ் பணி செய்வது நல்லது தானே? இதற்குத் தயங்குகின்றீர்களே?" என்றார்.

அதற்குக் கதாதரர் "எந்த வேலையிலும் கட்டுண்டு வாழ நான் விரும்பவில்லை. கோயில் பணியை ஏற்றுக்கொண்டால் காளி விக்கிரகத்தின் மீது உள்ள ஆபரணங்களுக்கும் நான் தானே பொறுப்பு. அது என்னால் முடியாது. ஆபரணங்களின் பொறுப்பை நீ ஏற்றுக்கொண்டு என்னுடன் தங்குவதானால் நான் பூஜைப் பணியை ஏற்றுக் கொள்ளலாம்" என்று சொன்னார்.

வேலை தேடி தக்ஷிணேஸ்வரம் வந்த ஹிருதயர் உடனே கதாதரரின் வேண்டுகோளுக்கு இசைந்தார். அதன் பின்னர் கதாதரர் மதுர்பாபுவிடம் சென்றார். எதிர்பார்த்தபடியே மதுர்பாபு கோயில் பணியை ஏற்கும்படி வேண்டினார். கதாரரும் முன்பு குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் அதனை ஏற்றுக் கொண்டார்.

( மிகுதி அடுத்த இதழில் தொடரும். )

ஆக்கம்: **உ. சசிதரன்,** பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

## கடந்த இதழில் பிரசுரிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 5 தா | | | |
| | | 4 கு | ந் | தி | | |
| | 3 ர் | ர | க | ங் | 6 ச | |
| | க | | | | ப | |
| 2 ப | சு | | | | 7 ரி | 8 அ |
| க் | | | | | | வி |
| 1 தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |

# பாப்பா பாப்பா கதை கேளு...

ரவி பணக்கார வீட்டுப் பையன், செல்லப் பிள்ளையும் கூட. பிரபலமான ஒரு ஆங்கிலப் பள்ளியில் இரண்டாம் வகுப்புப் படிக்கிறான். அவனுக்குப் பிராணிகளைக் கண்டாலே பிடிக்காது. எறும்பைப் பார்த்தாலும் நசுக்கி சாகடித்து விடுவான்.

## உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

ஒரு நாள் ரவியை பள்ளிச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்றனர். ரவியும் சந்தோஷத்தோடு சென்றான். மதியம், மலைப்பாங்கான பகுதியில் உணவு அருந்த ஒரு மரத்தடியில் அனைவரும் உட்கார்ந்தனர். சுற்றி ரோஜாப் பூக்கள் நிறைந்த அழகான தோட்டம் ரவியை மிகவும் கவர்ந்தது. வெண்மை நிறத்தில் பட்டுப் போன்ற இதழ்களோடு ரோஜா ஒன்று பூத்திருந்தது. அதன் மீது பல வண்ணங்களை ஆடையாகக் கொண்ட ஒரு பட்டுப் பூச்சி. எழும்பிக் குதித்தான் ரவி. சுற்றுச் சூழ்நிலையை மறந்தான். அதனைப் பிடித்துச் சித்திரவதை செய்யும் ஆவலில் எழுந்தோடினான். அந்தப் பட்டுப் பூச்சி ரவிக்கு ஆட்டம் காண்பித்து எங்கெங்கோ ஓடியது. அதன் பின்னாலேயே ஓடியவன் திரும்பிப் பார்த்தான். அவன் பள்ளிப் பிள்ளைகளையோ ஆசிரியர்களையோ காணவில்லை.






ஒரு காட்டினில் இருப்பதை உணர்ந்தான். அவன் எதிரே ஆறு ஒன்று ஓடிக் கொண்டு இருந்தது. பயத்தால் நடுங்க ஆரம்பித்தான் ரவி. சிறு பையனான ரவியைக் கண்டதும் மரத்தில் உள்ள குரங்குகள் கீழே இறங்கி ஓடி வந்து வேடிக்கை பார்த்தன. ரவிக்கு குரங்குகளைப் பார்க்க பயத்தை விட அருவருப்புத்தான் அதிகமானது. குழறி அழ ஆரம்பித்தான்.

பசியினால்தான் ரவி அழுகிறான் என்று உணர்ந்த சில குரங்குகள் மரத்தின் மீது ஏறி நிறையப் பழங்களைப் பறித்து வந்து அவனிடம் போட்டன. ரவிக்குப் பசி அதிகமாக இருந்தபடியால் பழத்தை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தான். கொஞ்சம் தெம்பு வந்தது. இப்பொழுது குரங்குகளைப் பார்த்து வெறுக்கவில்லை அவன். பசியாறியதும் அவற்றை நேசிக்க ஆரம்பித்தான். புதரில் இருந்து ஐந்து ஆறு முயல் குட்டிகள் அவனோடு விளையாட வந்து விட்டன.





பச்சைக் கிளிகள் அவனைச் சுற்றி வந்து அவன் தனிமையைப் போக்கின. குழந்தையால் நமக்கு ஒன்றும் தீங்கு நேராது என தைரியம் கொண்ட விலங்கினங்கள் சிறிது நேரத்தில் அவனுக்கு நண்பர்களாயின. புதரின் இடையே ஊர்ந்து ரவியிடம் வந்த பாம்பை ஒரு கீரிப்பிள்ளை தன் கூரிய பற்களால் நறுக்கிப் போட்டது. மரத்தடியில் சாப்பிட்டு முடித்த ஆசிரியர்கள் ரவியைக் காணாது சுற்றும்முற்றும் தேடினர், காணவில்லை. ஆகவே ரவியின் வீட்டுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். ரவியின் தந்தை உடனே காவல் நிலையத்துக்கு தகவல் கொடுத்தார். மூன்று காவலர்கள் உட்பட அவனுடைய அப்பாவும் சேர்ந்து காவல் நாயோடு ரவியைத் தேடினர்.



காவல் நாய், ரவி சென்ற தடயங்களைப் பின்பற்றி காட்டின் உட்பகுதியை அடைந்தது. அங்கு ரவி பிராணிகளோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டதும் சந்தோஷத்தில் ஓடிப்போய் தூக்கிக் கொண்டார் ரவியின் அப்பா.

பெரியவர்களைக் கண்டதும் பிராணிகள் அனைத்தும் ஓடி ஒளிந்து கொண்டன. தன்னைக் கண்டுபிடித்துக் கொடுத்ததும் ஒரு பிராணிதான் என்று உணர்ந்த ரவி, தன் தந்தையிடம் தனக்கு விளையாட ஒரு நாயும், பூனையும் வேண்டுமெனக் கேட்க ஆரம்பித்தான். வீட்டுக்குப் போய் சேர்ந்ததும் முதலாவதாக ரவிக்கு ஒரு நாய்க்குட்டியும் பூனைக்குட்டியும் வாங்கிக் கொடுத்தார். இப்பொழுதெல்லாம் ரவி பிராணிகளை இம்சிப்பதே இல்லை. மாறாக அன்பு காண்பிக்க ஆரம்பித்திருக்கிறான்.





மாதம் ஒரு முறையாவது இரண்டு கூடை பழங்களோடு அந்தக் காட்டுக்குள் சென்று பழங்களை பிராணிகளுக்கு சந்தோஷத்தோடு விநியோகம் செய்வான் ரவி. பிராணிகளும் ரவியின் பரிவுக்காக மாதந்தோறும் காத்திருக்கும்.

தொகுப்பு: **க. கலைவாணி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை



## உங்கள் கருத்து

இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் பாடம் என்ன? உங்கள் கருத்துக்களை அண்ணளவாக 100 சொற்களில் எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழின் 'படம் தரும் பாடம்' பகுதியில் பிரசுரிக்கப்படும்.

அன்பார்ந்த வாசகர்களே! சென்ற இதழில் ஐதரேய உபநிஷதம் பற்றிப் பார்த்தோம். இவ்விதழில் தைத்திரீய உபநிஷதத்தை நோக்குவோம்.

## தைத்திரீய உபநிஷதம்

யஜூர் வேதத்தின் பாகமான கிருஷ்ண யஜூர் வேதத்திலுள்ள தைத்திரீய ஆரண்யகத்தின் 7, 8, 9 ஆம் பகுதிகளே தைத்திரீய உபநிஷதமாகும். வைசம்பாய முனிவரின் மாணவர்கள் தித்திரிப் பறவைகளின் வடிவத்தில் இந்த உபநிஷதத்தை ஏற்றுக் கொண்டதால் இது 'தைத்திரீய உபநிஷதம்' என்று அழைக்கப்படுகிறது.

வாழ்க்கையின் அடிப்படை பற்றிய அற்புதமான ஒரு கல்வியாக அமைகின்றது இந்த உபநிஷதம். மனிதன் என்பவன் யார்?, சமுதாயத்தில் நல்ல அங்கத்தினனாக விளங்குவதற்கான கடமைகள் எவை?, தெய்வ சிந்தனையுடன் வாழ்வது எப்படி?, அதிக இன்பத்தை அனுபவிப்பது எப்படி? என்பவை போன்ற அன்றாட வாழ்க்கை விஷயங்கள் இங்கே ஆராயப்படுகின்றன.

வாழ்க்கையை வெறுக்கவோ, வாழ்க்கையில் இருந்து விலகி ஓடவோ வேண்டாம் என்பதை வலியுறுத்துவதுடன், இன்பமான, வளமான வாழ்க்கை வாழ்வது இறைவனின் மகிமையை வெளிப்படுத்துவதாகும் என்ற கருத்தைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டுகிறது இந்த உபநிஷதம்.

இந்த உபநிஷதத்தில் வாழ்க்கைக் கல்வி, மனிதன், கடவுள் என்று மூன்று பகுதிகள் உள்ளன.

### 01. ஷீஷாவல்லி (வாழ்க்கைக் கல்வி)

வாழ்க்கை பற்றிச் சிறப்பாகக் கூறுவதால் இந்தப்பகுதி 'ஷீஷா வல்லி' (வாழ்க்கைக் கல்வி) என்று சிறப்பாக அழைக்கப்படுகின்றது. வாழ்க்கைக் கல்வியில் பிரார்த்தனை, வேதம் ஓதுதல், மனப்பயிற்சி என்று மூன்று பிரிவுகள் உள்ளன. உபநிஷதம் காட்டும் வாழ்க்கைக் கல்வியின் முதல் அம்சம் பிரார்த்தனை. உயர்ந்த எதையும் சாதிப்பதற்குப் பிரார்த்தனை பூர்வமான வாழ்க்கை தேவை.

இயற்கையை அணுகும் போதும் சரி, இறைவனை நாடும் போதும் சரி பணிவுடனும் பிரார்த்தனையுடனும் முயற்சிகளைச் செய்தால் பாதை சுலபமாகிறது.



பல்வேறு தேவர்களிடம் பிரார்த்திப்பதாக இது அமைந்துள்ளது. காண்கின்ற புற உலகை இயக்குகின்ற தூல சக்திகளாயினும் சரி, காணாத அக உலகை இயக்குகின்ற சூட்சுமசக்திகள் ஆயினும் சரி, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தெய்வமாக உபநிஷதரிஷிகள் கண்டனர்.

இப் பிரார்த்தனை மூலம் இயற்கையுடன் இயைபு (Harmony with nature) என்ற கருத்தும் சுட்டிக் காட்டப்படுகின்றது. இயற்கையில் காணப்படுகின்ற அனைத்துமே சமுதாயத்தின் அங்கங்கள். இவற்றுடன் இயைந்து வாழும் போதே வாழ்க்கை அதன் முழுப்பரிமாணத்துடன் திகழும். எனவே, இயற்கையைப் போற்றுவதற்கு முதலில் போதிக்கப்படுகின்றது.



மனிதவாழ்வு வளம் பெறவேண்டுமானால் இயற்கைச் சக்திகளை வளம் பெறச் செய்யவேண்டும். இயற்கைச் சக்திகளான அந்தத் தேவர்களிடம் பிரார்த்தனை செய்வதற்காக அமைந்துள்ள இது இயற்கையுடன் இயைந்து வாழ்வதற்கு வலியுறுத்துகிறது.

வாழ்க்கைக் கல்வியின் அடுத்த அம்சமாக வருவது வேதபாராயணம். அதாவது வேதம் ஓதுதல். வேதங்களை ஓதும் போது நாம் ஒலி ஏற்ற - இறக்கம், நீட்டல் - குறுக்கல் (குறில் - நெடில்), உச்சரிப்பதற்கான முயற்சி, நிறுத்தும் விவரம், தெளிவான உச்சரிப்பு என்பவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். உபநிஷதம் காட்டும் வாழ்க்கையின் இறுதி அம்சம் மனப்பயிற்சி. மனஒருமைப்பாட்டின் மூலமாக எதையும் சாதிக்கமுடியும். மலைகளைக் கூட அணு அணுவாக உடைத்தெறிய முடியும் என்று கூறுவார் சுவாமி விவேகானந்தர்.

எனவே வாழ்க்கையில் உயர்ந்த எதையாவது சாதிக்கவேண்டும் எனில் மனத்தினை ஒருமைப்படுத்தவேண்டும்.



ஆனால் எடுத்த எடுப்பில் மனத்தை ஒருமைப்படுத்த முயன்றால் அது பொதுவாகத் தோல்வியிலேயே முடியும். ஏனெனில் மனஒருமைப்பாடு என்பது படிப்படியாக மனதைச் சிறு எல்லைக்குள் கட்டுப்படுத்தல் என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளை நாம் மறந்து விடுகிறோம். இங்கே உபநிஷதம் மனஒருங்கிணைப்பு, உணர்வின் விரிவு, தியானம் என்று மூன்றுபடிகளாகச் செய்யுமாறு வலியுறுத்துகிறது.

இவ்வாறு குருகுலவாசம் முடித்துவிட்டு மாணாக்கர் வீடு திரும்பும் போது ஆச்சாரியார் அவர்கள் சிறந்து வாழ அவர்களுக்கு நல்ல அறிவுரைகளைச் சொல்வார். ஆச்சார்ய உபதேசம் என அக்காலத்தில் வழங்கப்பட்டு வந்த இது 'பட்டமளிப்பு' என இன்றும் பல்கலைக் கழகங்களில் நடாத்தப்பட்டுவருகிறது. அவ்வகையில் குரு மாணவனுக்கு பின்வருமாறு உபதேசித்தார்.

"உண்மை பேசுக. அறவழியில் வாழ்க. குருவிற்கு விருப்பமான காணிக்கைகளைக் கொடு. நல்ல சந்ததியினரைப் பெற்று எடுப்பாயாக. உண்மையிலிருந்து பிறழாதே! கற்றதைப் பிறருக்குச் சொல்லித்தருவதைத் தொடர்ந்து செய். தேவ, பித்ருக்களின் பூசையைத் தவறாமல் செய். தாயார் தெய்வவடிவம். தந்தையும் தெய்வவடிவம். குருவும் தெய்வவடிவம். விருந்தினரும் தெய்வவடிவம். வணக்கத்துடனும், விவேகத்துடனும் தானங்களைச் செய். ஆண்டவனது கட்டளையும், பெரியோரின் உபதேசமும் இதுவே!"

ஆக்கம்: **ஜெ.காயத்திரி**, தரம் 10,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

**உண்மைச் சம்பவம்**

## குட்டிச் சிங்கங்கள்

"இளைய தலைமுறையினரிடமே, நவீன தலைமுறையினரிடமே எனது நம்பிக்கை இருக்கிறது. அதிலிருந்தே எனது தொண்டர்கள் தோன்றுவார்கள். சிங்கக்குட்டிகளைப் போல் தைரியத்துடன் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணுவார்கள்." என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றை மெய்யாக்கிச் சாதனை படைத்த இரு இளைஞர்களின் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவம் இதோ!



இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த அக்ஷெய் ஜெயராம் ரோஜ் என்னும் பதின்மூன்று வயது நிரம்பிய சிறுவன் ஒருவனும் அவனுடைய தந்தையின் சகோதரி மகனாகிய சஞ்ஜெய் என்னும் பதினேழு வயதான சிறுவனுமே இச்சம்பவத்தின் நாயகர்கள். 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் நாள் உதித்த காலைப் பொழுது இவர்களுக்கு திகிலும் சாகசமும் நிறைந்த ஒரு நாளின் ஆரம்பமாக இருக்கப்போவதை அறியாமலே வழமைபோல் இருவரும் கால்நடைகளை மேய்ப்பதற்காக அருகிலிருந்த காட்டிற்கு கால்நடைக்ளை ஓட்டிச் சென்றனர். கால்நடைகள் உணவைத் தேடிக் காட்டிற்குள் வெகுதூரம் சென்றன. சிறுவர்கள் இருவரும் தம்மையறியாமலே கால்நடைகளைப் பின்தொடர்ந்து சென்றனர். கால்நடைகள் ஓரிடத்தில் தரித்து நின்று மேய்ந்தன. சஞ்ஜெய் தன் கையில் ஒரு புல் வெட்டும் கத்தியுடன் கால்நடைகளுடன் நின்று காட்டின் அழகை இரசித்துக் கொண்டிருந்தான். அக்ஷெய் அங்கிருந்த வண்ண வண்ணக் காட்டுப் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தான்.

திடீரென அக்காட்டின் அடர்ந்த பகுதிக்குள் இருந்து வெளியே பாய்ந்து வந்தது ஒரு புலி. வந்த வேகத்தில் அது அக்ஷெயைக் குறிவைத்து அவன் மீது பாய்ந்தது. அக்ஷெய் நிலை தடுமாறிக் கீழே விழுந்தான், எனினும் நிதானமிழக்கவில்லை.

அமைதியாக புலியின் கால் பாதங்களால் தன் முகம் தாக்குப்படாத வண்ணம் தனது கைகளால் தடுத்துக் கொண்டிருந்தான். அக்ஷெய் விழுவதைக் கண்ட சஞ்செய் வேகமாக அவனை நோக்கி ஓடிவந்து தன் கையிலிருந்த கத்தியால் புலியைச் சரமாரியாக தாக்கத் தொடங்கினான். அக்ஷெயின் முகத்தின்



இடது பக்க மேல்புறம் மட்டும் தாக்கப்பட்டிருந்த நிலையிலும் அவன் எதைப்பற்றியும் அச்சப்படவில்லை. புலியின் பாதங்களைத் தன் கைகளினால் தடுப்பதிலேயே குறியாயிருந்தான். சஞ்ஜெயின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத புலி திரும்பவும் காட்டிற்குள் ஓடி மறைந்தது.

இளம் சிறார்களின் வீரத்தையும் விவேகத்தையும் பாராட்டி Indian Council for Child Welfare (ICCW) உடனிணைந்து இந்திய அரசால் இந்தியக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் விருதுகளில்



ஒன்றான Bapu Gaidhani Award-ஐ இந்த வீரமிக்க இளைஞர்களான அக்ஷெய் ஜெயராம் ரோஜ் மற்றும் சஞ்ஜெய் இருவருக்கும் கடந்த வருடம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தன் கரங்களினால் வெள்ளிப் பதக்கத்தை வழங்கியதோடு மட்டுமல்லாமல் பாராட்டுச் சான்றிதழையும் பணப்பரிசையும் கல்விசார் நிதியுதவியையும் வழங்கிக் கௌரவித்தார்.

"உறுதியாக இரு உன் இலக்கை நோக்கிப் போராடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நம்பிக்கையையும் தைரியத்தையும் இழக்காதே! எதையும் பார்த்து அச்சப்படாதே! நீ அஞ்சுவதற்காகவோ அல்லது உன்னை அச்சப்படுத்துவதற்காகவோ அமைக்கப்பட்டதல்ல இந்த உலகம்."

தொகுப்பு: **ந. சஞ்சீவன்**, தரம் 08,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# கைம்மாறு கருதாத உதவி



5




6




7




8



எந்த விதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம், புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன் தான் சிறப்பாகப் பணியாற்றுகிறான். கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய்வதற்காக ஒருவன் தன்னைத் தானே தியாகம் செய்துவிட வேண்டும்.

– சுவாமி விவேகானந்தர் –

கதை : சி. அபிராமி , தொண்டாசிரியை
படம் : திருமதி.த. மோகன்
தொண்டாசிரியை

## புறப்பார்வையற்றவரின் சாதனை

**சாதனையாளர்**

திறமைசாலிகள் பலரது சாதனைகளுக்கு மத்தியில் ஒருமாற்றுத்திறனாளியாக இருப்பவர் தன் வாழ்க்கையில் சாதிப்பது மட்டுமன்றி ஒரு பாடசாலையின் மாணவர்களின் கல்வி நிலையையும் உயர்த்துவது என்பது சிறப்பல்லவா? ஆம்! கண் பார்வையற்ற ஓர் இளம் ஆசிரியர் தன்னிடம் கற்கும் மாணவர்களை நூற்றுக்கு நூறு வீதம் தேர்ச்சி பெறச் செய்கிறாராம். தமிழ் நாட்டின் சென்னையைச் சேர்ந்த இவரது பெயர் சக்திவேல். வரலாற்று ஆசிரியரான இவர் கற்பிக்கும் பாணி வித்தியாசமாக இருப்பதால்தான் மாணவர்களை இந்தளவிற்கு இவரால் தேர்ச்சி பெறச் செய்யமுடிகிறதாம். இவர் பிறக்கும்போது இவருக்குப் பார்வை தெளிவாக இருந்துள்ளது. எட்டாம் வகுப்பில் படிக்கையில்தான் பார்வை மங்க ஆரம்பித்தது. தீவிர சிகிச்சை பார்த்தும் பலனில்லை. இறுதியில் 9ஆம் வகுப்பில் கற்கையில் இவரது இரண்டு கண்களிலும் பார்வைமுற்றிலும் இல்லாமல் போனது.




ஆயினும் சக்திவேல் முயற்சியை விடவில்லை. எதையாவது வாழ்க்கையில் சாதிக்கவேண்டும் என்று துணிவு கொண்டார். தன்னை பார்வையற்றோருக்கான பாடசாலையில் சேர்க்குமாறு பெற்றோரிடம் கேட்டார். அவர் விருப்பப்படியே அத்தகைய பாடசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். ஒரே வருடத்தில் அங்கு "பிரெய்ல்" முறையை கற்றுத் தேர்ந்ததுடன் 10 ஆம் வகுப்பிற்கான பொதுப் பரீட்சையில் கூடிய மதிப்பெண்களைப் பெற்றுச் சாதனை நிகழ்த்தினார். தொடர்ந்து மாநிலக் கல்லூரியில் வரலாற்றுப பாடத்திலும் சித்திபெற்று B.A பட்டதாரியானார்.



தொடர்ந்து ஆசிரியர் தேர்ச்சிப் போட்டிப் பரீட்சையிலும் தேர்ச்சி



பெற்றுத் திருச்செங்காடு என்ற ஊரிலுள்ள சாதாரண மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையேற்றார். அதாவது 2005 ஆம் ஆண்டில் இவரது சொந்த ஊரில் இவர் ஆரம்பத்தில் கல்விகற்ற சாதாரண மாணவர்கள் கல்வியிலும் பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். இதனைத் தொடர்ந்து அந்தப் பாடசாலையில் திருப்புமுனை ஒன்றை இவர் ஏற்படுத்தினார். அந்தவகையில் இவரிடம் வரலாற்றுப்பாடம் கற்ற மாணவர்கள் நூற்றுக்கு நூறு புள்ளிகளைப் பெறத் தொடங்கினர்.



பொதுவாக வரலாற்றுப் பாடம் என்றாலே மாணவர்கள் கசப்பதாகக் கூறுவர். ஆனால் ஆசிரியர் சக்திவேலிடம் கற்கும் மாணவர்களுக்கு அவ்வாறல்ல. காரணம் அவர் வரலாற்றுப் பாடத்தை புதிய முறையில் கதை மாதிரிக் கூறிப் புரியவைக்கிறார். வரலாற்றுச் சம்பவத்தில் மன்னர்





வாள் எடுத்துச் சுற்றினார் என்றால் தானும் ஒருபோலிக் கத்தியொன்றைக் கையி-லெடுத்துச் சுழற்றிக் காட்டி நாடகபாணியில் விபரித்துப் பாடங்களைப் புரியவைக்கிறார். இந்தக் கல்வி புகட்டல் முறையானது மாணவர்களுக்கு நன்றாகவே பிடித்துவிட்டது. இதனால் ஆர்வத்துடன் படித்தனர். அதுமட்டுமன்றி ஒலிப்பதிவு கெசட் மூலமும் பாடங்களைப் பதிவு செய்துகொடுத்து அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தினார். மாற்றுத் திறனாளியான ஆசிரியர் சக்திவேலின் இந்த முயற்சியையும் திறமையையும் அதிகாரிகள் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர். 'மாணவர்களின் எதிர்காலத்திற்கு நான் வழிகாட்டுகிறேன். எனது நிகழ்காலத்திற்கு எனது மாணவர்கள் வழிகாட்டுகின்றனர்.

இவர்களின் துணை உள்ளவரை பார்வை எனக்கு ஒரு பொருட்டல்ல. கற்றலில் சிறந்த மாணவர்களை நான் உருவாக்கிக் கொண்டே இருப்பேன்' இவ்வாறு கூறுகிறார் ஆசிரியர் சக்திவேல்.

பார்வை இல்லாவிட்டாலும் தன் மாணவர்களுக்குப் புதுவித யுக்திகள் மூலமாக, பாடத்தைப் பாரமாக எண்ணாமல் விருப்புடன் கற்பதற்கு வழிகாட்டுவதே இவரது சிறப்பு.

எம்மிடம் இல்லாததை நினைத்து வருந்தாமல் இருப்பதைக் கொண்டு பிறருக்கும் பயனுள்ளமுறையில் வாழவேண்டும். எம்மிடம் என்னபொருள், பலம் உள்ளது என்பது முக்கியமில்லை. எமது செயல் மூலம் என்ன நன்மை விளைகிறது என்பதே முக்கியம்.




'உன்னால் பிறருக்கு உதவிபுரிய முடியுமானால் உன் வாழ்க்கையின் இலட்சியம் நிறைவேறிவிட்டதாக எண்ணிக்கொள்' என்ற கூற்றை ஆசிரியர் தன் வாழ்வின் இலக்காகக் கொண்டு வாழ்ந்துவருகிறார்.

ஒரு ஆசிரியராகமட்டுமின்றி உலகத்திற்கே ஒரு வழிகாட்டியாக இருக்கும் சக்திவேலிடம் உள்ள தன்னம்பிக்கை, துணிவு, விடாமுயற்சி போன்ற பண்புகளை நாமும் கற்கவேண்டும்.

தொகுப்பு: **கி. கிருஷாந்,** தரம் 09,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

எல்லோரிலும் எல்லையற்ற பூரணத்துவத்தின் கரு உள்ளது. நல்லெதிர்பார்ப்பு மனப்பான்மையும், எல்லாவற்றிலும் நல்லதையே பார்க்கும் பாங்கையும் நாம் வளர்க்க வேண்டும். நமது மனத்திலும் உடம்பிலும் உள்ள குறைபாடுகளை நினைத்து அழுவதில் எந்த லாபமும் இல்லை. எதிர்மறையான சூழ்நிலைகளை அடக்குகின்ற வீர முயற்சியே நம் ஆன்மாவை மேலே கொண்டு செல்லும்.

**- சுவாமி விவேகானந்தர் -**




# குறுக்கெழுத்துப் போட்டி

விடைகள்
அடுத்த இதழில்...

**இடமிருந்து வலம்**


1. ஆன்மா லயிக்கும் இடம்
4. பஞ்ச பூதங்களில் ஒன்று
6. உபநிடதங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
8. பிரணவ மந்திரம்
9. இறைவனின் திருவுருவம் (குழம்பியுள்ளது)
12. "____ நிறத்தவளாம் காளி அன்னை" (முன் எழுத்து இல்லை)

**மேலிருந்து கீழ்**

1. பாசத்தால் கட்டுண்டது
2. வேதம் நான்கிலும் உள்ள பொதுவான பகுதிகளுள் ஒன்று (குழம்பியுள்ளது)
3. உடல் (குழம்பியுள்ளது)
5. இந்துவான ஒருவன் செய்யவேண்டிய முக்கிய கடமைகளில் ஒன்றைக் குறிப்பது
7. ஆயகலைகளுள் ஒன்று (குழம்பியுள்ளது)
9. முதலாவது வேதம் (தலைகீழ்)
10. மதுரை மீனாட்சி அம்மனின் தோளில் இருப்பது
11. பக்தி மார்க்கம் என்பது இறைவனே _____ எனச் சார்தல் ஆகும்

ஆக்கம்: **வ. வானதி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# செய்திகள்



ஜூலை 12ஆம் திகதி, அனைவரும் தமது குருமார்களை நினைவுகூரும் தினமும், வியாசரின் ஜெயந்தி தினமுமாகிய குரு பூர்ணிமா தினம் எமது ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



ஜூலை 13ஆம் திகதி அன்று அறநெறி அமுதத்தின் 14ஆவது அமுதத்தின், 3ஆவது துளி சமய பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி. கௌரி ரத்னவேல் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.




ஆகஸ்ட் 17ஆம் திகதியன்று கோகுல பாலன் ஸ்ரீகிருஷ்ணரது ஜெயந்தி தினம், எமது ஆச்சிரமத்தில் பூஜை, பஜனை, போன்ற நிகழ்வுகளுடன் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.



மோதகப் பிரியரும், முதல் வணக்கத்திற்குரியவருமான விநாயகப் பெருமானுடைய சிறப்பு தினங்களில் ஒன்றான ஆவணிச் சதுர்த்தி ஆகஸ்ட் 29ஆம் திகதி அன்று எமது ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரது நேரடிச் சீடர்களான சுவாமி இராமகிருஷ்ணானந்தர், சுவாமி நிரஞ்ஜனானந்தர், சுவாமி அத்வைதானந்தர், சுவாமி அபேதானந்தர் மற்றும் சுவாமி அகண்டானந்தர் ஆகியோரது ஜெயந்தி தினங்கள் முறையே ஜூலை 24, ஆகஸ்ட் 10, 24 மற்றும் செப்டெம்பர் 17, 24 ஆகிய திகதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது.





செப்டெம்பர் 14ஆம் திகதியன்று ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி தினமும், ஞாயிறு சமயபாடசாலையின் 62ஆவது ஆண்டு விழாவும் சமயபாடசாலை மாணவர்களால், இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மாணவர்களின் நடனம், பேச்சு, பஜனை, நாடகம் மற்றும் யோகாசனம் போன்ற நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன. அந்நிகழ்விற்கு ப்ரவ்ராஜிகா சுசாந்தப்ராணா மாதாஜி அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து விழாவைச் சிறப்பித்தார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட திருமதி ஹேமா சண்முகசர்மா அவர்கள் மாணவர்களின் கைவண்ணங்களைக் கொண்டு உருவாக்கப்படும் கையெழுத்துச் சஞ்சிகையான விவேகவாகினியையும் வெளியிட்டு வைத்தார்.



---

துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முப்பெருந்தேவியரின் அருளை வேண்டி செப்டெம்பர் 25அம் திகதி முதல் ஒக்டோபர் 03ஆம் திகதி வரையிலான 9 நாட்களும் நவராத்திரி விரதம் எமது ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இதையொட்டி, தினமும் காலையில் தேவி மஹாத்மிய பாராயணம் இடம்பெற்றது.








மஹா அஷ்டமி தினமான ஒக்டோபர் 2ஆம் திகதி ஆசிரமத்தில் சிறப்பு ஹோமம் நடைபெற்றது. இறுதி நாளான விஜயதசமியன்று ஆசிரமத்தில், ஸ்ரீமத் சுவாமி இராஜேஷ்வரானந்த மஹராஜ் அவர்களால் பல சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் தொடக்கி வைக்கப்பட்டது.

ஒக்டோபர் 4ஆம் திகதியன்று இராமகிருஷ்ண மிஷனில் இயங்கி வரும் விவேகானந்த நுண்கலைக் கல்லூரியிலும் விஜயதசமி தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு சங்கீதம், பண்ணிசை, வீணை ஆகிய கலைகள் பயிற்றுவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் புதிய மாணவர்கள் பலரும் இணைந்து கொண்டனர்.

ஒக்டோபர் 5ஆம் திகதியன்று எமது சமய பாடசாலை மாணவர்களால் நடனம், பேச்சு, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளுடன் நவராத்திரி வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.





## நீங்களும் எழுதலாம்...


*அறநெறி அமுதத்தில் நீங்களும் எழுத விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:*

மாணவர்களின் பண்பு வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பயன்படக்கூடிய

1. கதை
2. கட்டுரை
3. படித்துச் சுவைத்தவை
4. கேட்டுச் சுவைத்தவை
5. உண்மைச் சம்பவங்கள்

ஆகியவற்றை எழுதி "அறநெறி அமுதம்" எனக் குறிப்பிட்டு முன் அட்டையில் உள்ள முகவரிக்கு அனுப்பவும். பொருத்தமான ஆக்கங்கள் உரிய திருத்தங்களுடன் பிரசுரிக்கப்படும். ஆக்கத்தை அனுப்பும்போது உங்களைப்பற்றிய விபரத்தையும் எழுதி அனுப்புங்கள். இதழாசிரியர்களின் முடிவே இறுதியானது.

கடந்த இதழில் 'உங்கள் கருத்து' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட படத்திற்கு மாணவர்களின் கருத்துக்கள்...



**படம் தரும் பாடம்**

இந்தப் படத்திலிருந்து நீங்கள் விளங்குவது என்ன? நீந்தத் தெரியாத ஒரு நாய்க்குட்டியைக் குதிரையொன்று தனது முதுகில் சுமந்து கொண்டு நீரிலிருந்து கரைக்குக் கொண்டு செல்கிறது.

மனிதர்களோ இனம், மொழி என வேறுபாடு காட்டி சீரழிந்து போகின்ற இக் காலத்தில் இந்தக் குதிரை தனது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் வேறு இனத்தைச் சேர்ந்த நாயைத் தனது முதுகில் சுமந்து செல்கிறது. எங்களால் ஏன் இப்படிச் செய்ய முடியவில்லை. எம்மால் இயன்றவரை பிறருக்கு உதவி புரிய வேண்டும். அத்துடன் உதவி புரிதல் நற்செயல் என்பதைப் பிறருக்கும் உணர்த்தி, அவர்களையும் உதவி செய்யத் தூண்ட வேண்டும். (**ஆ.சிந்துஜன்**- தரம் -4, விவேகானந்தா கல்லூரி)

"ஐந்தறிவு கொண்ட விலங்குகளே பிறருக்கு உதவும் போது, ஆறறிவு கொண்ட மனிதனுக்கு உதவும் தன்மை இன்றைய காலத்தில் குறைந்து செல்கிறது. மனிதன் பொதுநலமின்றி சுயநலத்துடன் வாழ்வதை விடுத்து பிறருக்கு உதவும் மனப்பாங்கை விருத்தி செய்வது அவசியமாகும்."

(**ச.சதுர்ஷன்** - தரம்-8, இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை)

"ஐந்தறிவு உள்ள பிராணியே உதவி புரியும் போது ஏன் பகுத்தறிவுள்ள நாங்கள் செய்ய முடியாது? ஒருவருக்குத் துன்பம் ஏற்படுகின்ற போது எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது உதவி செய்ய வேண்டும். அவர் திருப்தி அடைய வேண்டும் என்று நினைத்து உள்ளம் உவந்து செய்ய வேண்டும். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழிக்கிணங்க எல்லோருடனும் ஒன்று சேர்ந்து வாழப்பழக வேண்டும்."

(**செ.காயத்ரி**- தரம்-10, இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.)

# உங்கள் சிந்தனைக்கு...

"அசைக்கவொண்ணா உறுதியின் முன் மலையும் வழி கொடுக்கும்' என்ற முதுமொழிகள் நிஜத்தில் சாத்தியமா? சாத்தியப்படுத்தினார் ஒருவர். அவர்தான் இந்தியாவைச் சேர்ந்த தசரத மாஞ்சி.

அவர் வாழ்ந்த பின்தங்கிய கிராமத்திற்கும் நகரத்திற்கும் நடுவில் ஒரு பெரிய மலை இருந்தது. நகரத்திற்குச் செல்வற்கு அதைச் சுற்றி 50 கிலோமீற்றர் பயணிக்க வேண்டியிருந்தது. மாஞ்சிக்கு அப்போது 22 வயது. ஒருநாள் அவனது மனைவிக்குக் காலில் அடிபட்டதால் நகரத்திலிருந்த வைத்தியசாலைக்குப் போகவேண்டியிருந்தது. மலையைச் சுற்றி நகரத்துக்குப் போவதன் சிரமத்தை மாஞ்சி அனுபவித்துணர்ந்தான்.

'மலைக்கு நடுவில் இருந்த ஒரு அடி அகலமான துவாரத்தைப் பெரிதாக்கி ஒரு பாதை அமைத்தால், இலகுவாக நகரத்திற்குச் செல்லலாமே!' என்று சிந்தித்தான் மாஞ்சி. நான் அந்த மலையை வெட்டிப் பாதை அமைப்பேன் என்று முடிவெடுத்தான். அவனது பேச்சைக் கேட்ட ஜனங்கள் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென ஏளனம் செய்தனர்.

ஆனால் தன் முடிவில் உறுதியாயிருந்த மாஞ்சி, தன் ஆடு, மாடுகளை விற்று உளி, கயிறு என்பவற்றை வாங்கினான். மலைக்குப் பக்கத்திலேயே குடிசைபோட்டுப் பசியை மறந்து பகலிரவாக உழைத்தான். 10 வருடங்களானதும் பாதை சற்றுப் பெரிதாகிவிட்டது. ஆரம்பத்தில் ஏளனம் செய்தவர்கள் இதைக் கண்டு ஒவ்வொருவராக தற்போது உதவிக்கு வந்தனர்.

22 வருடங்கள் கடுமையாக உழைத்தபின் அந்த மலைக்கு நடுவில் 16 அடி அகலத்தில் புதிய பாதை தயாரானது. மாஞ்சியின் அளவற்ற பொறுமைக்கும், அயராத உழைப்புக்கும் பலன் கிடைத்தது. 50 கிலோமீற்றர் சுற்றுப் பாதை 8 கிலோமீற்றராகச் சுருங்கியது. மன உறுதி இருந்தால் தனி ஒருவனால் மலையைக்கூட அசைக்க முடியும் என்பதை சாதித்துக் காட்டிவிட்டார் தசரத மாஞ்சி.

"வெற்றி வேண்டுமானால் இடைவிடாத முயற்சியும் தீவிர சங்கல்பமும் உங்களிடம் வேண்டும். 'நான் கடலையே குடித்துவிடுவேன். எனது சங்கல்பத்தால் மலைகளே தூளாகிவிடும்' என்கிறான் இடையீடின்றிப் பாடுபடுபவன். அத்தகைய ஆற்றலை, சங்கல்பத்தைப் பெறுங்கள். கடினமாக உழையுங்கள், இலட்சியத்தை அடைவீர்கள்."

-சுவாமி விவேகானந்தர்.

அன்பளிப்பு ரூ. 10.00